திண்டுக்கல் மாவட்டம், பழனியில் நடைபெற்று வரும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் அருணகிரிநாதர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (25.08.2024) நடைபெற்ற இரண்டாம் நாள் தொடக்க விழாவில் மாநாட்டு விழா மலரை உயர்நீதிமன்ற நீதியரசர் ஆர்.சுரேஷ்குமார் வெளியிட கோவை கௌமார மடம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் பெற்று கொண்டார். உடன் உணவு மற்றும் உண்வுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அரசக்கரபாணி, இந்து சமய அறநிலையத்துறை அமைசார் பி.கே.சேகர்பாபு, ஆதின பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம். சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர். திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பூங்கொடி, கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு:

16 முருகனடியார்களின் பெயர்களில் விருதுகள்!

உயர்நீதிமன்ற நீதியரசர் பி.வேல்முருகன் வழங்கினார்!

பழனி, ஆக.27-

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இரண்டு நாட்களாக கோலாகலமாக நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் (25.08.2024) நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சி யில் அமைச்சர் பெருமக்கள் அர.சக்கரபாணி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில் உயர்நீதிமன்ற நீதியரசர் ஆர்.சுரேஷ்குமார் அவர்கள் மாநாட்டு மலரினை வெளியிட்டு சிறப்புரையாற்றுகையில் இப்படிப்பட்ட ஒரு உன்னதமான நிகழ்வை தமிழ் மண்ணிலே அரங்கேற்றிய தமிழ்நாடு அரசுக்கும், இந்து சமய அறநிலையத்துறைக்கும் பாராட்டுகளை தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, யாமிருக்க பயமேன் என்ற தலைப்பில் கலைமாமணி திருமதி தேச மங்கையர்க்கரசி திருமதி சுசித்ரா பாலசுப்ரமணியம் குழுவினர், இசைப்பேரரசி டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன் குழுவினரின் இசை நிகழ்ச்சிகள், நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள், பரதநாட்டியம், கந்தன் கருணை அமுதம் எனும் தலைப்பில் கருத்தரங்கம் மற்றும் கந்தன் பாடல்கள் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிறைவாக, அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் நிறைவு விழாவில் திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் அருளாசி வழங்கினார். பின்னர், சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் பி.வேல்முருகன் அவர்கள் தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய அடியார்கள், சமயப்பணி புரிந்தோர், சமய சொற்பொழிவாளர்கள், அதிகளவில் திருப்பணி மேற்கொண்டோர், ஆன்மிக மற்றும் இலக்கிய படைப்பாளர்களை சிறப்பிக்கும் வகையில் 16 நபர்களுக்கு பொற்பதக்கம், சான்றிதழ், பொன்னாடை மற்றும் பழனியாண்டவர் திருக்கோயில் பிரசாதம் போன்றவற்றை வழங்கி சிறப்பித்தார்.

போகர் சித்தர் விருதினை மருத்துவர் கு.சிவராமன், நக்கீரர் விருதினை முனைவர் பெ.சுப்பிரமணியம், அருணகிரிநாதர் இயல் விருதினை திருப்புகழ் மதிவண்ணன், அருணகிரிநாதர் இசை விருதினை வி.சம்பந்தம் குருக்கள், முருகம்மை யார் விருதினை மறவன்புலவு க.சச்சிதானந்தன், குமரகுருபர சுவாமிகள் விருதினை முனைவர் பனசை மூர்த்தி, திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் விருதினை பா.மாசிலாமணி, பகழிக் கூத்தர் விருதினை ஜெ.கனகராஜ் , கந்தபுராணக் கட்சியப்பர் விருதினை மருத்துவர் வ. ஜெயபாலன் , வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் விருதினை முனைவர் ந. சொக்கலிங்கம் , மாம்பழக் கவிச்சிங்க நாவலர் விருதினை முனைவர் புலவர் அமுதன் , சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் விருதினை முனைவர் சே.பார்த்த சாரதி, பாம்பன் சுவாமிகள் விருதினை தா.சந்திரசேகரன், தணிகைமணி வா.சு.செங்கல்வராயர் விருதினை முனைவர் வ.வெ.சசிவல்லி, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் விருதினை பேராசிரியர் சொ.சொ.மீ. சுந்தரம், தேனூர் வரகவி வே.செ. சொக்கலிங்கனார் விருதினை மா. திருநாவுக்கரசர் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இம்மாநாட்டில் 21 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்விழாவில் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பி.வேல்முருகன், பி.புகழேந்தி, வி.சிவஞானம், ஓய்வு பெற்ற நீதியரசர்கள் வி.பாரதிதாசன், ஆர். பொங்கியப்பன், சொக்கலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா. பூங்கொடி, கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் மு.பெ.சத்தியவேல் முருகனார், சுகி சிவம், திருமதி தேச மங்கையர்க்கரசி, திருமதி ந.திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள வாணி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், கழக தொழர்கள் பலரும் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட கழக துணைச் செயலாளர் மு.கணேசன் வருகைபுரிந்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

முத்தமிழ் முருகன் 2-ஆம் நாள் மாநாட்டில் 4 லட்சம் பேர் பங்கேற்றனர்!

30-ஆம் தேதி வரை கண்காட்சி நடைபெறுகிறது!

பழனி, ஆக.27

பழனியில் நடைபெறும் முத்தமிழ் முருகன் 2-ஆம் நாள் மாநாட்டில் 4 லட்சம் பேர் பங்கேற்றனர். 30-ஆம் தேதி வரை கண்காட்சி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழனியில் நேற்று முத்தமிழ் முருகன் மாநாடு 2-ஆவது நாளாக தொடங்கியது. பழனி முத்தமிழ் முருகன் மாநாட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்தார். இதையொட்டி ஏராளமான அரங்கங்கள், கண்காட்சிகள் தொடங்கப்பட்டது. இதை காலை முதல் இரவு 11 மணி வரை பக்தர்கள் கண்டுகளித்தனர். கலை நிகழ்ச்சிகளையும் கண்டு ரசித்தனர். அமைச்சர் சேகர்பாபு இறுதிவரை இருந்து கச்சேரியை பார்த்துக்கொண்டிருந்தார்.

நேற்று 2-ஆம் நாள் மாநாடு காலை 8 மணிக்கு திருவேல் இறைவன், தீ தமிழ் இசை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. அதன் பின்பு முருகனும் பரதமும், திருப்புகழ் தேனிசை, யாமிருக்க பயமேன் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நேற்று மாலையில் மாநாட்டு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது. அதன் பின்பு விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்திருந்தார்.

பழனியில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு கண்காட்சி ஆகஸ்ட் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இலவசமாக பார்வையிடும் வகையில் கண்காட்சியை நீட்டித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

மாநாட்டுக்கு வரும் பக்தர்களுக்கு முருகனின் ராஜ அலங்கார படம், திருநீறு, குங்குமம், பஞ்சாமிர்தம், கந்தசஷ்டி புத்தகம், லட்டு, முறுக்கு உள்ளிட்டவை அடங்கிய பிரசாத பைகள் வழங்கப்பட்டன.

இந்த மாநாட்டில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் சுமார் 4 லட்சம் பேர் கலந்து கொண்டனர்.

திருச்சி மத்திய - வடக்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் க.வைரமணி - ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருச்சி, ஆக. 27-

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

திருச்சி மத்திய மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் 29.08.2024 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத்தலைவர்கள் பேரூர் தர்மலிங்கம், அம்பிகாபதி ஆகியோர் தலைமையிலும் கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு முன்னிலையிலும் நடைபெறவிருக்கின்றது.

அதுசமயம் திருச்சி மத்திய மற்றும் வடக்கு மாவட்டத்தைச் சார்ந்த தி.மு.க பொது உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கிளைக்கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற,சட்ட மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க.

ஒன்றிய, பகுதி பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்.

மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர், ஆக.27-

தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் பகுதிகளில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெயியிட்டுள்ள அறிக்கை வருமாறு : 16.08.2024 அன்று சென்னையில் நடைபெற்ற மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் மாண்புமிகு கழகத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்ட ஒன்றிய, பகுதி, மற்றும் பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ் கண்டவாறு நடைபெறுகின்றது. இக்கூட்டத்தில் முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய மற்றும் பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

31.08.2024 சனிக்கிழமை காலை 10 மணியளவில் மாவட்டக் கழகத்தின் சார்பில் தஞ்சாவூர் ஜெயராம் மஹாலில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

அதனை தொடர்ந்து 01.09.2024 ஞாயிறு மாலை 4 மணிக்கு தஞ்சை மேற்கு, ஆலக்குடி, டாக்டர் விஜய லெட்சுமி வரதராஜன் திருமண மண்டபத்திலும், மாலை 05 மணிக்கு திருவையாறு தெற்கு ஒன்றியம், கேடி.ஏ.ராஜா திருமண மண்டபம், கண்டியூர்,

02.09.2024 திங்கள் காலை 10 மணிக்கு ஒரத்தநாடு வடக்கு கோவிலூர், காசவளநாடு திருமண மண்டபம், மாலை 4 மணிக்கு தஞ்சை மாநகர், கோட்டை பகுதி, பங்காரு காமாட்சி மஹால், மேலவீதி, தஞ்சாவூர்.

03.09.2024 செவ்வாய் காலை 10 மணி பூதலூர் வடக்கு, எம்.வி.கே.திருமணமண்டபம், பூதலூர். காலை 10.30 மணி திருவையாறு வடக்கு ஆர்.ஒய்.எஸ். திருமண மண்டபம், திங்களூர் ஆர்ச். மாலை 4 மணி தஞ்சை கிழக்கு, சுந்தர் மஹால், காவேரிநகர், தஞ்சை. மாலை 5 மணி திருவையாறு பேரூர் காவேரி திருமண மண்டபம், திருவையாறு.

04.09.2024 புதன் மாலை 4 மணி கரந்தை பகுதி, சத்யா மஹால், வடக்கு வீதி, தஞ்சை.

05.09.2024 வியாழன் மாலை 4 மணி, மருத்துவக் கல்லூரி பகுதி, ராஸ் பேலஸ் திருமண மண்டபம், குந்தவை நாச்சியார் சாலை, தஞ்சை.

06.09.2024 வெள்ளி மாலை 4 மணி வல்லம் பேரூர், சமுதாயக்கூட்டம், வல்லம்,

07.09.2024 சனிக்கிழமை ஒரத்தநாடு பேரூர் காலை 10 மணி, எம்.ஆர்.திருமண மண்டபம், ஒரத்தநாடு, காலை 10.30 ஒரத்தநாடு தெற்கு மாணிக்கம் மஹால், பாப்பாநாடு, மாலை 4 மணி கீழவாசல் பகுதி, கலைஞர் அறிவாலயம், தஞ்சாவூர். மாலை 5 மணி தஞ்சை வடக்கு, சமுதாயக்கூட்டம், அம்மன்பேட்டை.

08.09.2024 ஞாயிறு மாலை 4 மணி ஓவியா திருமண மண்டபம், செங்கிப்பட்டி.

09.09.2024 திங்கள் காலை 10 மணிக்கு பல் நோக்கு சேவை மையம், தெக்கூர், மாலை 4 மணி ஒரத்தநாடு கிழக்கு எம்.ஆர். திருமண மண்டபம், ஒரத்தநாடு.

10.09.2024 செவ்வாய் காலை 10 சித்தி விநாயகர் திருமண மண்டபம், ஊரணிபுரம், காலை 10.30 மணி தஞ்சை தெற்கு, பானு திருமண மண்டபம், வல்லம், மாலை 4 மணிக்கு சமுதாய கூட்டம், அரண்மனை, மேலத்திருப்பூந்துருத்தி, மாலை 5 மணி திருக்காட்டுப்பள்ளி பேரூர், எம்.வி.கே.திருமண மண்டபம், திருக்காட்டுப்பள்ளி.

கூட்டத்தின் பொருள் :

1. 2024 செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 ஆவது பிறந்த நாள் விழா.
2. 2024 செப்டம்பர் 16 தி.மு.கழகத்தின் பவள விழா.
3. 2024 செப்டம்பர் 17 தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்தநாள் விழா.
4. ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள் நியமித்தல்.
5. கழக ஆக்கப்பணிகள்.

மேற்கண்டவாறு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கோவை தெற்கு மாவட்டக் கழக இளைஞரணி அமைப்பாளர் கே.பி.கே.எஸ். சபரிகார்த்திகேயன் ஆலோசனையின் பேரில் சூலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தெற்கு ஒன்றியம் பட்டணம் ஊராட்சிக்குட்பட்ட பாகம் எண்198200 202க்கு உட்பட்ட பகுதியில் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இருகூர் உதயபூபதி தலைமையில் சூலூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் த.மன்னவன் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தெற்கு மாவட்ட இலக்கிய அணி தலைவர் செல்வகுமார், மாவட்டப் பிரதிநிதி தம்பிராஜேந்திரன், ஒன்றியச் செயற்குழு உறுப்பினர் வி.நாகராஜ், கிளைக்கழக பொருளாளர் வேலுச்சாமி, இளைஞரணி சிங்காரவேலு, பாகமுகவர் ஹரிபிரகாஷ், செயலாளர் தாமோதரசாமி, மனோகரர், ஒன்றிய மகளிர் தொண்டரணி நிர்மலாதேவி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்ட நெசவாளர் அணித் தலைவர்

பெரியபாண்டி (எ) வீரபாண்டி மறைவு!

கழகத்தினர் நேரில் அஞ்சலி!

நாகை, ஆக. 27-

நாகை மாவட்ட தி.மு.க. நெசவாளர் அணி தலைவர் பெரியபாண்டி (எ) வீர பாண்டி (வயது 67) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைந்த வீரபாண்டிக்கு மனைவி பாண்டியம்மாள் மகன்கள் ஏ.வி. சுதன், ஏ.வி.சரவணன, ஏ.வி. சூர்யா ஆகியோர் உள்ளனர். நாகை வெளிப்பாளையம் ரயிலடி அருகே உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ள வீரபாண்டி யன் உடலுக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் உள்ளிட்ட கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

என்.ஆர். ராமதாஸ்
ஆகஸ்ட் 27 (2016)



இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியதோடு, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இராசிபுரம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

இராசிபுரம் நகராட்சித் தலைவராக வெற்றி பெற்று, நகர மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். சேலம் மாவட்ட பொன்னி கூட்டுறவு அங்காடி நிர்வாக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

1962–ல் விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – 1964–ல் சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தனது வாழ்நாள் முழுவதும் மிதிவண்டியிலேயே சென்று கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.